# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2053 ● ஆகஸ்ட் 13, 2022 Weekly E-paper ● August 13, 2022




## தேசியக் கொடியிலும் சாதியக்கறை

சுப.வீரபாண்டியன்

### சாதித்துக் காட்டினார் ஸ்டாலின்!

சாரதாதேவி

### இது மக்கள் விரோத மசோதா!

தலையங்கம்

### இங்கு வேண்டாம், வட நாட்டு உணவரசியல்!

வெற்றிச்செல்வன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2053 ● ஆகஸ்ட் 13, 2022 | Weekly E-paper ● August 13, 2022


# தேசியக் கொடியிலும் சாதியக்கறை

**சுப.வீரபாண்டியன்**

வரும் ஆகஸ்ட் 15ஆம் நாள், 75 ஆவது விடுதலை நாள் என்பதால் அதற்கு ஒரு சிறப்பு இருக்கிறது. வீடுகள் தோறும் தேசியக்கொடி ஏற்ற வேண்டும் என்று பிரதமர் கேட்டுக் கொண்டிருக்கிறார். நல்ல வேண்டுகோள்தான். ஆனாலும் அந்தக் கொடிகள் கைத்தறியிலோ கதரிலோ இல்லாமல், பாலிஸ்டரில் இருக்கும் என்பதுதான் கொஞ்சம் நெருடலாக இருக்கிறது. நடுவில் அசோகச் சக்கரத்திற்குப் பதிலாக அதானியின் முகத்தைப் பதிக்காமல் இருக்கிற வரையில் மகிழ்ச்சிதான்.

போகட்டும், இப்போது எழுந்துள்ள இன்னொரு பெரிய சிக்கல் பற்றி நாம் பேச வேண்டி இருக்கிறது. பல ஊர்களில், குறிப்பாகச் சின்னச் சின்ன ஊராட்சிகளில், பட்டியலினத்தைச் சேர்ந்த மக்கள் ஊராட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால், அவர்கள் தேசியக் கொடியை ஏற்றக் கூடாது என்று ஊரில் இருக்கும் சாதி வெறியர்கள் சிலர் தடை போடுகின்றனர். அதே சாதியைச் சேர்ந்த ஜனநாயக வாதிகள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்துப் பட்டியலின மக்களே ஏற்ற வேண்டும் என்று கூறும் நிலையையும் நாம் பார்க்கிறோம்.

இது ஒரு பெரும் சிக்கலாகப் பல சிற்றூர்களில் தலையெடுத்து இருக்கிறது. தேசியக் கொடியிலும் இப்படிச் சாதியக் கறைகள் படிந்து



கிடப்பது ஒரு பெரிய அவமானம் என்றே சொல்ல வேண்டும்.

இந்த நிலையில் தான் தமிழ்நாடு அரசின் சார்பில், தலைமைச் செயலாளர் ஓர் அறிக்கையை வெளியிட்டு இருக்கிறார். யார் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்களோ அவர்கள்தான் கொடியேற்ற வேண்டும், தடுப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்த அறிக்கை சொல்கிறது.

சமூக நீதியை நிலைநாட்ட இப்படி ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ள தமிழ்நாடு அரசை நாம் பாராட்டுகிறோம். அதே வேளையில், இதற்கு இப்படி ஓர் அறிக்கையை வெளியிட வேண்டிய நிலையில்தான் நான் இருக்கிறோம் என்பது வேதனை நிரம்பிய செய்திதான்.

சில ஊர்களில் இந்தச் சிக்கல் தீர்ந்து விட்டது பல்வேறு கட்சிகளையும், முற்போக்குச் சிந்தனைகளையும் கொண்டவர்கள் ஒருங்கிணைந்து அனைவருடனும் பேசி நியாயமான, சமத்துவமான முடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

ஆனால் இன்னும் சில ஊர்களில்அந்தச் சிக்கல் இன்னும் தீராமல் இருக்கிறது என்பது உண்மைதான். அப்படிப்பட்ட இடங்களில் அரசு தலையிட்டுச் சற்றுக் கடுமையாக நடந்து கொண்டுதான் சமூக நீதியை நிலைநாட்ட வேண்டி இருக்கிறது.

அரசியல் விடுதலையைப் பெற்றிருக்கிறோம். ஆனால் நம் நாடு இன்னும் சமூக, பண்பாட்டு விடுதலைத் தளங்களில் ஊடாடிக் கொண்டேதான் இருக்கிறது என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

இன்னும் எத்தனை காலத்திற்குத்தான் சாதி என்னும் நச்சு மரத்தை எதிர்த்து நாம் போராட வேண்டி இருக்குமோ தெரியவில்லை. எத்தனை காலமானாலும் எவ்வளவு கடுமையான நிலைகளைச் சந்தித்தாலும், சாதியின் சல்லி வேர்களைக் கிள்ளி எறியும் வரை போராட்டம் தொடர வேண்டும்.

திராவிட இயக்கம் சென்ற நூற்றாண்டில் தொடக்கி வைத்த இந்த சமூக நீதிப் போர் இன்னும் தொடர்கிறது. இறுதி வெற்றியை எட்டும் வரையில் தொடரும். இறுதியில் வெல்லும். ●

**15-08-2022** அன்று
ஈரோடு, பெரியார் மன்றத்தில்,
மாலை 6 மணிக்குப்
**பேராசிரியர் சுப.வீரபாண்டியன், சிற்பி செல்வராஜ், ஈரோடு வீரமணி**
ஆகியோர் சிறப்புரையாற்ற
இருக்கிறார்கள்.
வாருங்கள் தோழர்களே!

**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**
ஈரோடு.



# தமிழ்நாட்டின் "ஆனைக் குப்பி" சாதித்துக் காட்டினார் ஸ்டாலின்!

**சாரதாதேவி**

விளையாட்டில் பேரார்வம் கொண்ட ஒருவர், கணியன் பூங்குன்றனாரின் பேரர், முதல்வரானால் என்ன நடக்கும்? கிடைத்தற்கரிய வாய்ப்புகள் கூட எல்லைகள் கடந்து தேடி வரும். ஆம்! 44ஆவது செஸ் ஒலிம்பியாட் நடத்தும் வாய்ப்பு அப்படித்தான் தமிழ் நாட்டுக்குக் கிடைத்தது! ருசிய நாடு நடத்தி இருக்க வேண்டிய இந்தப் போட்டிகளை, உக்ரைன் போர் காரணமாக சர்வதேசச் செஸ் அமைப்பான FIDE மாற்ற நினைக்க, அது ஒரு வேளை இந்தியாவிற்கு வந்தால் தமிழ்நாடு அந்த வாய்ப்பைப் பெற வேண்டும் என முதல்வர் மு.க. ஸ்டாலின் கட்டளை இட, எதிர்பார்த்த படியே இந்தியாவிடம் அந்த அமைப்பு வினவியது. பிற மாநிலங்கள் தயக்கம் காட்டிய அதே நேரத்தில், தம்மால் முடியும் எனத் தமிழ்நாடு ஆர்வம் காட்ட நமக்குக் கிடைத்தது பெரும் வாய்ப்பு!

186 நாடுகள்! 2000க்கும் மேற்பட்ட வீரர்கள்! 2 வாரங்கள்! சென்னை தாங்குமா? பணம் இருக்கிறதா? தயாரிப்புக்குக் காலம் இருக்கிறதா? விளையாட்டுத் திடல் இருக்கிறதா? தங்கும் வசதி இருக்கிறதா? இல்லை என்பதே 'இல்லை' என்றவர்கள் தமிழர்கள்! "பாரடா உனது மானுடப் பரப்பை!"; விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை!" "அணைந்து கொள் உன்னைச் சங்கமமாக்கு!" என்று பாடியவரின் மண்ணாயிற்றே?! சிறிதும் தயங்காமல் அத்துனை நாடுகளையும், அத்துனை வீரர்களையும் வாரி அணைத்துக் கொண்டார் முதல்வர்!

தொடக்கமும் கோலாகலம்! முடிவும் கோலாகலம்!

100 கோடிகள் உடனடியாக ஒதுக்கீடு. அரசுப் பள்ளிகளில் சதுரங்கப் போட்டியில் வென்ற மாணாக்கர் கொடி தாங்கி முன் நடக்க, விளையாட்டு வீரர்களின் அணிவகுப்பு! பாரம்பரிய நடனங்கள்! இசை விளையாட்டுகள்! கண்களுக்கும் காதுகளுக்கும் விருந்து! கமலஹாசனின் பின்னணிக் குரலில் சித்தாந்தத் தந்தை பெரியார் வரலாறு! சிவகார்த்திகேயன் மகளின் வாழ்த்துப் பாடல்! விக்னேஷ் சிவனின் நிகழ்ச்சி இயக்கம்! யாரை எங்கே எதற்குப் பயன்படுத்துகிறோம் என்ற தெளிவு! தலைமை அமைச்சர் வருவதற்குத் தாமதமானாலும் குறித்த நேரத்தில் தொடங்கும் திண்மை! தமிழ் நாட்டின் தொல்லியல் பெருமை, ஆனைக்குப்பி என்று தமிழ் இலக்கியங்கள் சொன்ன சதுரங்க விளையாட்டின் தலைநகராகச் சென்னை அடையாளம், கீழடியில் கிடைத்த தந்த வடிவங்கள் சதுரங்கக் காய்களாக இருக்கும் விளக்கம் என முதலமைச்சரின் பேச்சில் என்ன ஒரு முதிர்ச்சி! வழமையாகப் படம் பிடிப்பவனையே பார்க்கும் பெரியவரைக் கூட முதலமைச்சரைப் பார்க்க வைத்த பெருமையும் அவருடைய பேச்சுக்கே உண்டு!

ஒவ்வொரு வீரருக்கும் வரவேற்புப் பரிசு முடிப்புகள்! உலகத் தரத்துடன் ஒரு நாளும் மீண்டும் வராத உணவு வகைகள்! ஓய்வெடுக்கவும் புதுப்பித்துக் கொள்ளவும் மாமல்லபுரத்துக் கடற்கரைகள்! கரை ஏறியவுடன் இயற்கையும் கலையும் சிற்பங்களும் சங்கமிக்கும் வரலாற்று நகரத்தில் 50,000 x 40,000 சதுர அடியில் விளையாட்டு அரங்கம்! பிரமிக்க வைத்துவிட்டார் முதல்வர்! உலகிலேயே கடந்த 98 ஆண்டுகளில் இல்லாத அளவு வசதிகள் செய்யப்பட்டிருந்ததாக விளையாட்டு வீரர்களே பாராட்டி இருக்கிறார்கள்! சிறிதும் பிசிறில்லாமல் ஒரு பெரிய நாட்டுக்கு இணையாக ஒரு மாநிலம் இவ்வளவையும் தன்னுடைய பொருட்செலவிலேயே செய்து, இந்திய நாட்டுக்கும் தன் மாநிலத்துக்கும் உலக அரங்கில் அசைக்க முடியாத பெருமையைச் சேர்த்திருக்கிறது!

இது தொடக்கம்தான் என்கிறார்கள்! நம் எதிர்பார்ப்புகள் எகிறுகின்றன! "உங்கள் தமிழ்நாடு" என்று நாடாளுமன்றத்தில் மண்டியிடும் மாமிகளுக்கோ இரத்தக் கொதிப்பு எகிறும்! ●

# ஜீ...பூம்...பா......!

**சிற்பி செல்வராஜ்**



கடந்த சில நாட்களுக்கு முன்னர் தமிழகத்தினுடைய ஆளுநர் திரு ஆர்.என் ரவி அவர்களைத் தான் சந்தித்தபோது இருவரும் அரசியல் நிலவரங்கள் குறித்துப் பேசியதாகச் செய்தியாளர்களிடம் சொன்னார் நடிகர் ரஜினிகாந்த். அரசியல் நிலவரங்களைப் பற்றிப் பேசியதாகக் கூறிய ரஜினிகாந்த் அவர்கள், என்ன பேசினார்கள் என்பதை வெளிப்படையாகக் கூற மறுத்துவிட்டார், செய்தியாளர்களிடம்.

என்ன பேசி இருப்பார் என்கிற கேள்வி அனைவருக்கும் ஏற்படுவது இயல்பு. சரி, அரசியல் நிலவரங்களை இவர்கள் பேசினார்கள் என்று சொன்னால் என்ன பேசினார்கள்?

பெட்ரோல், டீசல் விலை உயர்வு குறித்து பேசினார்களா, இந்திய ஒன்றியத்தின் பிரதம அமைச்சர் நரேந்திர மோடி கேஸ் சிலிண்டர் விலையை உயர்த்தி இருக்கிறாரே அது தொடர்பாகப் பேசினார்களா, மக்களை வதைக்கும் மின்சார சட்டத் திருத்தத்தை நாடாளுமன்றத்தில் கொண்டு வந்திருக்கிறார்களே அது குறித்துப் பேசினார்களா, ரபேல் விமானங்கள் எப்படி வாங்கப்பட்டன என்பது குறித்துப் பேசினார்களா, ரூபாய் 15 லட்சம் ஒவ்வொருவர் வங்கிக் கணக்கிலும் போடப்படும் என்று சொல்லி ஆட்சிக்கு வந்த மோடி, அதை மறந்தது குறித்துப் பேசினார்களா, 5ஜி அலைக்கற்றை ஏலத்தில் மிகப்பெரிய ஊழல் நடந்திருப்பதாகச் சொல்கிறார்களே அது குறித்துப் பேசினார்களா?

அல்லது தமிழ்நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் தளபதி ஸ்டாலின் அவர்களின் 'திராவிட மாடல்' ஆட்சியின் சாதனைகளை எதிர்கொள்ள முடியாமல், ஒரு வகையான தலை சுற்றும் அரசியலைப் பேசியிருப்பார்களா?

நான் அரசியல் பேசினேன் என்று சொல்வதும், எனக்கு அரசியலே வேண்டாம் என்று சொல்வது ஒரு புதிய வகையிலான அரசியல் போல இருக்கிறது.

அடுத்து, ஆளுநராக இருக்கக்கூடிய ஒருவர், ஆளுநர் மாளிகையில், அதுவும் இதுவரையும் அரசியலுக்குள் வராத ஒருவரிடம் அரசியல் பேசினார் என்றால் அது என்ன ஆளுநர் மாளிகையா அல்லது கட்சி அலுவலகமா?

தமிழ்நாட்டின் ஆளுநராக இருக்கக்கூடிய ஆர்.என்.ரவி பல்வேறு வகையில் அரசியலையும், சனாதன விமர்சனங்களையும் பொதுவெளியில் தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார்.

அண்மையில் டில்லிக்குப் போய் விட்டுத் திரும்பி வந்தார் ரஜினி. விரைவில் தமிழகம் வர இருக்கிறார் அமித் ஷா. இதற்கு இடையில் ஆளுநர் ரவியும், நடிகர் ரஜினிகாந்தும் ஆளுநர் மாளிகையில் சந்தித்து, செய்தியாளர்கள் மூலம் மக்களுக்குச் சொல்ல முடியாத அளவுக்கு அரசியல் பேசியிருக்கிறார்கள் என்றால் அந்த அரசியலுக்குப் பெயர் என்ன?

ஜீ... பூம் ... பா....! ●

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## இது மக்கள் விரோத மசோதா!

மின்சார சட்டத்திருத்த மசோதாவை 08-08-2022 அன்று நாடாளுமன்ற மக்களவையில் ஒன்றிய மின்துறை அமைச்சர் ஆர்.கே.சிங் தாக்கல் செய்தார். அப்போதே தி.மு.கழகம் உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இம்மசோதாவை கடுமையாக எதிர்த்தனர்.

இது நடைமுறைக்கு வருமானால் ஏழை மக்களுக்கான 100 யூனிட் இலவச மின்சாரம், விசைத்தறி நெசவாளர்கள், விவசாயிகள் உள்ளிட்ட குடிசை வீடுகளுக்கான இலவச மின்சாரம் அனைத்தும் கடுமையாகப் பாதிக்கும்.

மாநில அரசுகளால் உருவாக்கப்பட்டுள்ள மின் ஒழுங்குமுறை ஆணையங்கள் எவ்வித அதிகாரமும் இன்றி, ஒன்றிய ஒழுங்கு முறை ஆணையத்தால் அதிகாரங்கள் பறிக்கப்படும்.

ஒன்றிய ஆணையம் பிறப்பிக்கும் உத்தரவை மாநில அரசுகள் கடைப்பிடிக்கவில்லை என்றால் அபராதமாக ஒரு கோடி ரூபாய் வரை செலுத்த வேண்டி வரும்.

நாட்டுடைமை நிறுவனங்களைத் தனியாருக்கு விற்று வருவதைப் போல இந்தத் திருத்த மசோதாவும், மின்சாரத் துறையைத் தனியார்மயமாக்க எடுக்கும் முயற்சியாக இருக்கிறது.

மாநில அரசால் கட்டப்பட்ட மின்துறை கட்டமைப்புகள், டிரான்ஸ்பார்மர்கள் உள்பட அனைத்தும் அப்படியே பறிபோய்விடும்.

அதற்கான எவ்விதக் கட்டணமும் மாநில அரசுக்குக் கிடைக்காது.

தனியார்மயமாக ஆக்கப்பட்டு விட்டால், இன்று தமிழக அரசு தரும் இலவச மின்சாரத்திற்கு கட்டணம் செலுத்த வேண்டிவரும். அதுவும் தனியார் நிர்ணயித்த விலையில்.

இப்படிப்பட்ட மக்கள் விரோத சட்ட மசோதாக்களைத் தொடர்ந்து பா.ஜ.க. அரசு நிறைவேற்றி வருவது கவலை அளிப்பதாக இருக்கிறது.

இப்பொழுது நாடாளுமன்ற அலுவல் ஆய்வுக் குழுவில் இருக்கும் இம்மசோதா, முழுமையாகவே மக்கள் நலன் கருதி ரத்து செய்யப்பட வேண்டும்

மாநில அரசுகளின் உரிமைகளைப் பறிக்கும் பா.ஜ.க.அரசின் செயல் வன்மையான கண்டனத்திற்கு உரியது.

## தலைவருக்குப் புகழஞ்சலி



07-08-2022 அன்று காலையில் திராவிடர் இயக்கத் தமிழர் பேரவைத் தலைமை அலுவலகத்தில் தலைவர் கலைஞர் அவர்களுக்குப் பேரவைப் பொதுச் செயலாளர் சுப.வீரபாண்டியன் தலைமையில் புகழஞ்சலி செலுத்தப்பட்டது.

## மதுரையில் புகழஞ்சலி



மதுரை மாநகர் மாவட்டப் பேரவை சார்பில் தலைவர் கலைஞருக்கு 07-08-2022 அன்று புகழ் வணக்கம் செலுத்தப்பட்டது. தோழர் ஜெயபால் சண்முகம் தலைமையில், தோழர்கள் வீரகணேசன், சரவணன், அமர்நாத், கார்த்திக், கருப்பையா, முருகன், சுகுமார், நாகராசன் உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## பழனியில் கண்டனப் பரப்புரை




07-08-2022 அன்று பழனி நகரில் ஐந்து இடங்களில் ஆளுநரின் RSS முகமூடியை மக்களிடம் அம்பலப்படுத்தித் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் பரப்புரைக் கூட்டங்கள் நடத்தப் பெற்றன. பேரவைத் தோழர்கள் புலேந்திரன், ஞானசேகர், தமிழினியன், விடுதலை, தமிழ்முத்து, பார்த்திபன், செயராம், செயச்சந்திரன், அய்யாவு ஆகியோருடன் தந்தை பெரியார் திராவிடர் கழகம் - விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தோழர்கள் பாவேந்தன், கார்த்தி,அன்பழகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினர்.

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்: எழில். இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
உதயகுமார், வெற்றிச்செல்வன், சாரதாதேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்
www.keetru.com, www.karunchattaibooks.com
மின் அஞ்சல்: karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்,
சென்னை - 600 024,தொலைபேசி: 044-2472 6408

# பீகார் ஆட்சி மாற்றம்

## ஒன்றிணைந்தால் உண்டு நன்மை

**வழக்கறிஞர் இராம.வைரமுத்து**

பீகாரில் 2020ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் கூட்டணி அமைத்துப் போட்டியிட்ட பா.ஜ.க 77 இடங்களிலும், ஐக்கிய ஜனதா தளம் 45 இடங்களிலும் வென்றன. தேர்தலுக்கு முந்தைய ஒப்பந்தப்படி ஐக்கிய ஜனதா தளத்தின் தலைவர் நிதிஷ் குமார் முதல்வராகப் பதவியேற்றார். நிதிஷ் குமார் அமைச்சரவையில் பா.ஜ.கவைச் சேர்ந்த 16 பேர் அமைச்சரவையில் இடம் பெற்றனர்.

பாஜகவுடன் தொடர்ச்சியாகக் கருத்து முரண்பாடுகள் நிலவிய நிலையில் அக்கட்சியுடனான கூட்டணியை முறித்துக் கொள்வதாக நிதிஷ்குமார் அறிவித்ததுடன் ஆளுநரை நேரில் சந்தித்து முதல்வர் பதவியில் இருந்து விலகுவதாகக் கடிதம் அளித்தார்.

ஆளுநர் மாளிகையில் இருந்து நேராக லாலு பிரசாத் யாதவ் இல்லம் சென்று அவரது மகனும் இராஷ்ட்ரிய ஜனதாதளம் தலைவருமான தேஜஸ்வி யாதவை சந்தித்தார். அவரது வேண்டுகோளை ஏற்று ஐக்கிய ஜனதா தளத்திற்கு இராஷ்ட்ரிய ஜனதாதளம், காங்கிரஸ், இடதுசாரிகள் கூட்டணி ஆதரவு அளித்துள்ளது. 7 கட்சிகளைச் சேர்ந்த 164 சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் பீகார் முதல்வராக நிதிஷ் குமார், துணை முதல்வராக தேஜஸ்வி பதவி ஏற்றனர்.

“பா.ஜ.க சமூக வலைத்தளங்களில் டி.பியை (முகப்புப் படம்) மாற்றுமாறு கேட்டது. நாங்கள் அவர்களது அரசையே மாற்றி விட்டோம்” என்று தனது பாணியில் லாலு பிரசாத் கருத்து தெரிவித்துள்ளார். பா.ஜ.க ஐக்கிய ஜனதா தளத்தை அழிக்க முயற்சித்த காரணத்தால் கூட்டணியை விட்டு வெளியேறி இருப்பதாகக் கூறும் நிதிஷ் குமார் இதற்கு முன்பு ஒரே இரவில் இராஷ்ட்ரிய ஜனதாதளம் கூட்டணியில் இருந்து மாறி பா.ஜ.கவுடன் அணி சேர்ந்தவர். நிதிஷ் குமாரின் நம்பகத்தன்மை கேள்விக்குறியாக இருப்பினும், அவரது கடந்த காலத் தவறுகளை மறந்து அவருக்கு ஆதரவளித்துள்ள தேஜஸ்வியின் முடிவு வரவேற்கத்தக்கது.

இது தொடர்பாக தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட ட்விட்டர் பதிவில், “பீகார் முதல்வராக மீண்டும் பதவியேற்றுள்ள நிதிஷ் குமாருக்கும், துணை முதல்வராகப் பதவியேற்றுள்ள தேஜஸ்வி யாதவுக்கும் இதயம் நிறைந்த வாழ்த்துகள். நாட்டின் மதச்சார்பற்ற, ஜனநாயக சக்திகளைக் காக்கும் வகையில் காலத்தே மேற்கொள்ளப்பட்டுள்ள ஒரு முயற்சியாக மீண்டும் மகா கூட்டணி அமைந்துள்ளது” எனத் தெரிவித்தார்.

தமிழ்நாட்டின் முதல்வர் மு.க.ஸ்டாலினின் வாழ்த்துக்குப் பீகார் துணை முதல்வர் தேஜஸ்வி “நன்றி அண்ணா! இந்த பிரிவினைவாத மற்றும் எதேச்சதிகார அரசை எதிர்த்து நாம் அனைவரும் ஒன்றிணைந்து போராடுவோம். அவர்களுக்கு இன்று முதல் பின்னடைவு தொடங்குகிறது” என்று பதிலளித்துள்ளார்.

சில மாதங்களுக்கு முன்னர் முதல்வர் மு.க.ஸ்டாலினின் தன் வரலாற்று நூலான ‘உங்களில் ஒருவன்’ புத்தக வெளியீட்டு விழாவில் தேஜஸ்வி “சமூக நீதி பற்றிய எங்கள் பார்வைக்குத் தமிழ்நாடே உந்து சக்தி. பெரியார், அண்ணா, கலைஞர் ஆகியோர் எங்களுக்கெல்லாம் முன்னோடி தலைவர்கள். சமூக நீதியும், பொருளாதார நீதியும் இணைந்ததே மு.க.ஸ்டாலினின் திராவிட மாடல்” என்று பேசியது குறிப்பிடத்தக்கது.

பழைய கசப்புணர்வுகளைப் புறந்தள்ளி பா.ஜ.கவிற்கு எதிராக வலுவான அணியை கட்டமைத்துப் பெரும் வெற்றியை ஈட்டிய தமிழ்நாட்டின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை முன்மாதிரியாக கொண்டுள்ள தேஜஸ்வியின் இந்த அணுகுமுறை எதிர் வரும் 2024 நாடாளுமன்ற தேர்தலில் அவரது கூட்டணிக்குப் பெரும் வெற்றியை ஈட்டித் தரும் என்பதால் இந்திய ஒன்றியத்தில் பா.ஜ.க அல்லாத அரசு அமைவதற்கான தொடக்கமாகவே பீகாரில் நிகழ்ந்துள்ள இந்த ஆட்சி மாற்றம் அமைகிறது. ●

# இங்கு வேண்டாம், வட நாட்டு உணவரசியல்!

**வெற்றிச்செல்வன்**

கடந்த மே மாதம் திருப்பத்தூரில் நடைபெறுவதாக இருந்த ஆம்பூர் பிரியாணித் திருவிழா, மாட்டுக்கறி தொடர்பாக எழுந்த ச்ர்ச்சையினால் ஒத்தி வைக்கப்பட்டது. பிரியாணித் திருவிழாவில் மாட்டுக்கறி கூடாது என்று திருப்பத்தூர் மாவட்ட நிர்வாகத்தினால் கொடுக்கப்பட்ட அறிவிப்பே சர்ச்சைக்குக் காரணம். இதனையடுத்து தமிழ்நாடு மாநில ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான ஆணையத்தால் திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியரிடம் விளக்கம் கேட்கப்பட்டது. அது தொடர்பாக, தற்போது, அரசால் நடத்தப்படும் பிரியாணித் திருவிழாக்களில் மாட்டுக்கறியைத் தடை செய்யக் கூடாது என்ற அறிவுரையை ஆணையம் ஆட்சியருக்கு வழங்கியுள்ளது. அவ்வாறு மாட்டுக் கறியை விலக்கி வைப்பது, உணவு தொடர்பாகப் பாகுபாடு காட்டுவதாக ஆகிவிடும் என்றும் ஆட்சியருக்கு ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

இந்நிலையில், சேலம் மாவட்டத்தில், பல ஆண்டுகளாக பாதுஷா மைதீன் என்பவர் நடத்தி வந்த மானா சில்லி கடையினை இந்து முன்னணி அமைப்பினரின் அராஜகப் போக்கிற்கு அடிபணிந்து, சில நாட்களுக்கு முன்னர் கடையை மூடி சீல் வைத்துள்ளது மாவட்ட நிர்வாகம்.



இரண்டு மாதங்களுக்கு முன்னர் தி.மு.க அரசின் ஓராண்டு சாதனை விளக்கப் பொதுக் கூட்டத்தில் பேசிய முதல்வர் அவர்கள், “ஆட்சிக்கு வர முடியாதவர்கள், ஆட்சியின் மீது குறை சொல்ல முடியாதவர்கள், ஆன்மிகத்தின் பெயரால் அரசியல் செய்கின்றனர். மதத்தின் பெயரால் அரசியல் செய்பவர்கள், மதவெறியைத் தூண்டி, ஆட்சியின் மீது பொய்யான அவதூறுகளை பேசி வருகின்றனர். எவரது பக்திக்கும், வழிபாட்டுக்கும் நான் தடையாக இருந்ததில்லை. இருக்கப்போவதுமில்லை. பக்திப் பிரச்சாரம் ஒருபுறம் நடக்கட்டும், பகுத்தறிவுப் பிரச்சாரம் ஒருபுறம் நடக்கும் என்பதுதான் கலைஞரின் கொள்கை. ஆட்சி என்பது அனைவருக்கும் பொதுவானது” என்று பேசினார்.

முதலமைச்சர் அவர்களின் அறிவுரையைச் செவிமடுத்து அனைவருக்குமான சமூக நீதி ஆட்சியை வழங்குவதே திராவிட மாடலுக்குப் பெருமை சேர்க்கும். அலுவலர்களின் அலட்சியப் போக்கு அண்ணா வழியில் நடக்கும் அரசுக்குக் களங்கம் கற்பிப்பதாக அமைந்து விடக் கூடாது.

மாட்டுக் கறியின் பெயரால் வட நாட்டில் ஆர். எஸ். எஸ். செய்து வரும் அரசியலை இங்கும் அரங்கேற்றப் பார்க்கின்றன சில சமூக விரோத அமைப்புகள். அதற்கு அரசு அலுவலர்களும் காவல்துறை அதிகாரிகளும் துணை நின்றுவிடக் கூடாது என்பதே நமது கோரிக்கை. ●